
# 31ஆம் நாள் நினைவாக..!



அமரர்

# முத்துக்குமாரு சுந்தரம்

அவர்களின் நினைவுமலர்

28.07.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் நெடுந்தீவு உதயபதியைப் பிறப்பிடமாகவும் இல. 820 கட்சன்வீதி , வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட இருமரபும் தூய தனி நாயக வழித்தோன்றலும் உயர் சைவ வேளாண் குல திலகமும் சற்குலசீலனுமாகிய

# அமரர்
# முத்துக்குமாரு சுந்தரம்

## அவர்களின் சிவபதப்பேறு
## குறித்த 31ம் நாள்
## " நினைவுமலர்"
## 28.07.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் நிறைந்த
எம் அன்புத் தந்தைக்கு இந்நூல்

# சமர்ப்பணம்

எங்களின் வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும்
ஆலமர விருட்சமாக
அல்லும் பகலும் அயராது பாடுபட்டு
தனக்கென வாழாது எமக்கென வாழ்ந்து
ஒழுக்கம், கல்வியையும் கற்க வழிகாட்டி
ஆருயிர் தெய்வத்தின் இனிய நினைவுதனை
இதயக்கமலத்தில் இருத்தி நெஞ்சுருகக்
கண்ணீர்
சிந்தி இம்மலரை அவரின்
பாதார விந்தத்தில் சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிறைந்த தந்தை



மண்மகிழ
01
01
1936

கண்நெகிழ
28
06
2017

அமரர

## முத்துக்குமாரு சுந்தரம்

அவர்களின் திதி வெண்பா

சீரோங்கு ஏவிளம்பி வருடம் ஆனி மாதம்
14ம் நாள் அபரபட்ஷ பஞ்சமி திதியதனில் – பார்புகழும்
சுந்தரம் எனும் பண்புடையோன் இறைபதம்
அடைந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

மாதர் பிறை கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர் சுமந்து ஏத்தி , புகுவார் அவர் பின் புகுவேன்!
யாதும் சுவடு படாமல் , ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப் பிடியோடு , களிறு வருவன கண்டேன்!

## திருவாசகம்



அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்தமாய்க் கசிந்துருக
என்பரமல்லா இன்னருள் தந்தாய்
யான் இதற்கிலன் ஓர்கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்து
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந்துறையாய் சிவபெருமானே
சீருடைச் சிவபுரத்தரசே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா



பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ(று) அமுதம்ஒத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடம்குலா வினரே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி உமைமண வாளனுக்(கு) ஆம்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
யுறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத வானந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
யுறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச் சனைசெய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற்றேன முதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்.

## தேற்றம்

மாநிலத்தைக் காத்து நின்ற
மன்னர்கள் பலரும் எங்கே?
நானிலத்தில் நன்கு வாழ்ந்த
நன்நெறியாளர்கள் எங்கே?
பூமிதனில் பொன் பொருள்கள்
சேர்த்து வைத்த செல்வர் எங்கே?
நேற்றிருந்தார் எவரும் இன்றில்லை
இன்றிருப்பார் எவரும் நாளையில்லை
ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும்
மாண்டோர்கள் மாநிலத்தில் வருவதில்லை
சின்னராசா உயிருக்கு மட்டுமிது
விதி விலக்கில்லை என உணர்ந்து
அமைதி கொண்டு அஞ்சலிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் மகிழ

01

01

1936



கண்நெகிழ

28

06

2017

# அமரர் முத்துக்குமாரு சுந்தரம்

## அவர்களின்

# வாழ்க்கை சுவடுகள்

இலங்கை எனும் தீவில் நான்கு பக்கமும் கடலால் சூழ்ந்த இந்துசமுத்திரத்தின் முத்தென விளங்குவதுமான இலங்கையின் வடபால் கல்வி, செல்வம், வீரம் மிக்க யாழ்ப்பாண நகரில் அமைந்தது. சப்ததீவுகளில் சைவமும் தமிழும் சிறந்து விளங்குவதும் பசு , பால், தேன் , குறிஞ்சா , முல்லை , தாழி , பொற்சீந்தில் முதலிய மூலிகைகளும் நிறைந்து விளங்குவதும் திருவருள் மேம்பாடு உடைய பெரிய பெயர்களையும் செல்வச்சிறப்புமிக்கதும் கொண்ட பாறதீவு என அழைக்கப்படும் பெருமை மிக்க தீவு தான் நெடுந்தீவு ஆகும்.

இத்திசையின் " கார்காத்த வேளாளர் காராளர்" தனிநாயகம் முதலிய வழித்தோன்றல் முத்துக்குமாரு என்பார். தன்குலத்தில் தோன்றிய சின்னத்தங்கத்தை திருமணம் செய்து ஆற்றிய நல்லறமாய் இல்லறத்தின் பயனால் 1936.01.01 அன்று கனிஷ்ட புதல்வனாக அமரர் சுந்தரம் மண்ணில் ஜனனம் ஆனார். இவரோடு சகோதரி தங்கம் (அமரர் ) , சகோதரன் நாகநாதி (அமரர்), சகோதரி பார்வதி, சகோதரன் முருகேசு (அமரர்) , சகோதரி வள்ளியம்மை , இரண்டு அண்ணாமார்களும் மூன்று அக்காமார்களுடனும் பிறந்தார் அமரர் சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் மறைந்தாலும் பெயர் சொல்ல வேண்டும்.
இவர்கள் போல் யார் என்று ஊர் சொல்ல வேண்டும்.




பிறக்கின்ற போதே இறப்பும் உறுதி என
பெரியதொரு உண்மை புலப்பட்டு நிற்கின்றது
சிறப்புற வாழ்ந்த இவர்கள் நல்லோர்
ஆழ்ந்து விட்டார்கள் அரனடியில் என்று அறி

தேற்றம் எழுதுவதால் தேறிவிடலாம் என்று
சாற்றவில்லை நானிங்கே சடுதியாய் – மாற்றம்
வராது வரும் வரைக்கும் மனதைத்திடப்படுத்தி
சராசரியாய் வாழ்வதுவே தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிப்பருவத்திலே நெடுந்தீவு யூனியன் ஸ்கூல்

கல்வி பயின்று பள்ளிக்காலத்தினை சிறப்பாக முடித்துக் கொண்டு வாழ்வின் முன்னேற்ற நோக்கத்திற்காக 1955 இல் கிளிநொச்சி விவசாய திணைக்களத்தில் ஊழியராக கடமையாற்ற தன்னலம் கருதாது ஊர்விட்டு உறவுவிட்டு விவசாயத்துறை விடுதியில் தங்கி விடாமுயற்சியுடன் கடமையாற்றி வந்தார். பெற்றோர் அறிவுரைக்கு இணங்க திருமண வாழ்க்கையை தொடர முடிவு செய்தார்.

அந்தச் சமயத்தில் சீதைக்கு நிகரான பெண்ணாம் கருங்குழல் அழகியுமான தையல்முத்து எனும் பெண்ணை சின்னத்தம்பியும் வள்ளியம்மையும் பெற்றெடுக்க இராமன் தேடிய சீதை தையல் முத்துவை முத்துக்குமாரு சின்னத்தங்கம் அவர்கள் அந்தணர் வேதமோதி அக்கினி முன்பாக அவையோர் சபையில் கரம்பற்றி கொடுத்தனர். " இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்பதற்கமைய இல்லறம் எனும் நல்லறத்தை வளம் நிறைந்த வட்டக்கச்சியில் ஆற்றி வந்தனர்.

தனது இல்லற வாழ்வை மேம்படுத்த கமத்திலும் ஈடுபட்டார். தொடர்ந்து தமது இனிமையான திருமணபந்தத்திற்கு அடையாளமாக கள்ளமில்லா வெள்ளையுள்ளம் படைத்த நங்கையாக லலிதா மண்ணுலகில் கால் பதித்தாள். அவளுடன் கூடி விளையாடுவதற்காக இரண்டாவது நங்கையாக முச்சக்தி யும் சேர்ந்த வண்ணம் பராசக்தி அவதரித்தாள். இந்திரலோகமே வியந்து நிற்கும் அளவிற்கு பாசத்தை பொழிய இந்திராதேவி எனும் நங்கை மூன்றாவதாகப் பிறந்தாள். ஆண் வாரிசை எதிர்பார்த்து காத்திருந்த வேளை அகிம்சை வழி நின்ற காந்திக்கு ஒப்பான தவப்புதல்வனாக கணேசகுமார் பூமியில் பிறப்பெடுத்தான். ஐந்தாங்கால் பிள்ளை கெஞ்சினாலும் கிடைக்காது என்பதற்கு எதிராக செல்வத்தோடு பிறந்தாள் இந்திராணி. சர்வமங்களமும் அன்பும் பண்பும் பொருந்திய கருங்குழல் அழகியாக கடைசி நங்கையாக மங்களேஸ்வரி ஜனனம் ஆனாள். அறிவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகம், வீரம், அழகு என்பன பொருந்திய கடைக்குட்டியாக சுரேஸ்குமார் மண்ணில் உதித்தார் இவ்வாறு ஏழு முத்துக்களைப் பெற்று மகிழ்ந்துலாவி ஆமுதூட்டி தாலாட்டுப் பாடி பள்ளி அனுப்பி சீர்சிறப்போடு ஊர் மெச்ச வாழ்ந்தனர்.

தம் முன்னால் ஏழு குழந்தைகளுக்கும் திருமணம் நடாத்தி பார்க்கும் அவாவில் சிறந்த மருமக்களாக தெய்வேந்திரன் (துரை) சுதேசகுமாரன் (சுரேஸ்), பாஸ்கரன் , சிவாஜினி (ராதா) , ரவீந்திரகுமார் (ரவி), நாகேஸ்வரன் ( நாகேஸ்) , சங்கீதா ( கீதா) என ஏழு திரவியங்களை கரம்பிடித்து கொடுத்தனர். அத்தோடு தமது கடமையை நிறுத்திவிடாது வெளிநாட்டிற்கும் அனுப்பி வாழ்வை இனிதே நடாத்த வழி அமைத்து கொடுத்தனர்.

இவர்களின் வம்சவழி பெயர் சொல்லும் பேரப்பிள்ளைகளாக திவாகர், உஷ்னியா, சத்தியசீலன் , பாமிலன், கபிலன் , பிரமிலன், விஜிதரன் , சயந்தன் , காயத்ரி , கோகுறதன், ஆதரன், ஜெனிசா, விதுசா, விபிசன், கிருசாந்தினி, டயிசினி, சிந்துஜா , யிவிசன், சாரங்கி, கனிசா, வர்சினி இவர்களுடன் கொஞ்சிக்குலாவி அறிவுரைகள் பல ஊட்டி மகிழ்ந்த தருணத்தில் பூட்டப்பிள்ளை களாக ரேனுகப்பிரியா , சத்தியப்பிரியா, மதுப்பிரியா, அஞ்சனா, ஆதிரா , புரூணோ ஆகியோரை கண்டு பூரிப்ப டைந்தனர். இடைப்பட்ட காலங்களில் தனது மனைவியுடன் பிள்ளைகளைக் காண வெளிநாடு சென்று அவர்களை கண்டு இன்பம்கொண்டு மீண்டும் இலங்கை வந்து தம்முடன் அன்பு காட்டும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் ஐந்தறிவு ஜீவன்களுடன் இன்பமாக வாழ்ந்து வரும் வேளையில் நாட்டின் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து அவ்வாழ்விற்கு தாழ்பட்டு அங்கிருந்து உடமை, பொருள், பண்டம் அனைத்தையும் இழந்து அத்துயர் ஆற முன் தன் குலவிளக்கான மனைவி தையல் முத்துவையும் 2009.02.14 ஆம் நாள் இழந்தார்.

அவ் இழப்பை ஈடுசெய்ய முடியாத அளவிற்கு பெருந்துயர் வாட்ட தாயை இழந்தாலும் அத் ஸ்தானத்தில் தந்தையை வைத்தனர் பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் முடிவுற்ற பின் மீண்டும் தமது வீடு வாசல் தேடி வந்தனர். குலவிளக்கு அணைந்தாலும் அக்குறையாம் அறியாவண்ணம் எம்மோடு பாசத்தின் அதிபதியாக வாழ்ந்து வந்தார் அமரர் சுந்தரம் . தொடர்ந்து பேரப்பிள்ளைகளின் திருமணம், மற்றும் இன்ப சடங்குகளிலும் தன் அகவையை பதித்தார். இவ்வாறு பல வருடம் புரண்டோட நம் வம்ச விருட்ச த்திற்கு யார் கண்பட்டதோ வீறு நடைபோட்டு வந்தவர் சிற கொடிந்த பறவையை போல் படுக்கையில் வீழ்த்தியது நோய். சில மாதங்களாக படுக்கையில் துன்புற்றார். அத்தருணத்திலும் தமது பிள்ளைகளை காண ஏங்கிய மனதிற்கு மருந்தாக கடல் கடந்து வந்து தம்முடைய தெய்வத்தை வந்து பார்த்தனர்.பிள்ளைகள் தந்தையுடன் கூட இருக்கமுடியவில்லையே எனப் பரிதவித்தனர். இங்கு கூட இருக்கும் இரு சகோதரிகளுக்கு அலைபேசியூடாக தினந்தோறும் தொடர்பில் இருந்து கொண்டு சுகதுக்கத்தை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும் அவரை காலன் விடவில்லை அவரை கடுமையாக ஆட்கொள்ள 28.06.2017 அன்று அடியேனை ஆட்கொள்ளும்படி ஆண்டவனிடம் அடி புகுந்தார் எங்கள் தெய்வம். இவர் என்றும் எம் மனங்களை விட்டு அகலவில்லை. அவரது ஒவ்வொரு சுவட்டிற்கும் எம் கண்ணீர் விட்டுக்கொண்டு இருக்கிறது.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை
இல்லாமல் இருக்கலாம் ஆனால்
அனைவருக்கும் திறமையை
வளர்த்துக்கொள்ள ஒரே மாதிரி
வாய்ப்புகள் உள்ளன. **– அப்துல் கலாம் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகள்மாரின் ஆராத்துயர்

ஆராரோ பாட இங்கு தாயும் இல்லை அரவணைத்துப் பேச எமக்கு தந்தையும் இல்லை இன்று உம் பிள்ளைகள் அநாதைகள் ஆனோம் .
தெய்வமே இனி இல்லை எனும் போது நெஞ்சம் ஏற்க மறுக்கிறது. எம் தாய் எமை பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்தவள் என்றால் எமை வளர்க்க நம் தாயையும் சேர்த்து தன் நெஞ்சில் சுமந்தவர் நம் தந்தை. கண்ணீர் விட்டாலும் கண்ணில் இருந்து மறையவில்லையே ஐயா உம் முகம் . நீர் வாழ்ந்த ஞாபகங்கள் மட்டுமே அடிக்கடி கண் முன் தோன்றுகிறது தெய்வமே! இறுதித் தருணத்தில் உங்கள் முகம் காணாது இரு ஜீவன் தவிக்கிறது அங்கே . இந்த உலகில் இருக்கின்ற எல்லா உறவுகளும் வெறுத்துப் போகுதையா உம் பிரிவால் தாய் இல்லை எனும்போது தந்தையின் தாய்மையை தந்தீர் எமக்கு. மறப்பதற்கு உமை மனதில் வைக்கவில்லை. இழப்பதற்கு உமை இதயத்தில் வைக்கவில்லையே உயிராய் அல்லவா வைத்தோம் எம் தெய்வமே. உமைப்பார்க்கும் சாட்டில் ஊர் உறவு திரண்டு நிற்கும் இன்று நீர் இல்லா வீட்டிற்கு இனி யார் வருவாரோ? நீர் எம்மைவிட்டு நிரந்தரமாய் நீங்கினாலும் நீர் வாழ்ந்த வீடு உம் நினைவை நம் கண் முன் காட்டுகிறது தந்தையே!
வாய் இல்லா ஜீவன் எல்லாம் கலங்குகிறதே ஐயா! கடைசித் தருணத்திலும் ஒரு வார்த்தை பேசாமல் போனது தான் ஏனோ? என்ன நினைத்து போனதுவோ நம் தெய்வம் யாரிடம் சொல்லி ஆறுவது தெய்வமே! கோடி கோடியாய் கொடுத்தாலும் நீர் தந்த அன்பிற்கு ஈடாகாது. நடமாடும் சாமி நீதானையா மீண்டும் உம் பிள்ளைகளாக பிறக்கவேண்டும்.

**மகள்மார்கள்**

**ரதி , சக்தி, இந்திரா, வேவி, வவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிள்ளைகளுடன்.....



வெளிநாட்டில் பிள்ளை , மருமக்கள் , பேரப்பிள்ளைகளுடன்...





பேரப்பிள்ளைகளுடன்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன்மாரின் உள்ளக் குமுறல்



தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தையே உன் அன்பின் முன்னே தகப்பனின் கண்ணீரைக் கண்டதில்லை. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை அன்று தாயை இழந்தோம் இன்று உமை இழந்தோம் இனி ஒன்றும் இல்லை ஐயா இழப்பதற்கு. அநாதைகளாக நிற்கின்றோமே தெய்வமே! நாம் எம் ஊர் திரும்பி செல்லும் வேளை அன்று உம் கண்ணில் வடிந்த கண்ணீரின் அர்த்தம் புரியவில்லை எமக்குப் புரிந்திருந்தால் அக்கணமே நின்றிருப்போமே ஐயா உம்மோடு. இனி பார்க்க முடியாது என்றா அழுதீர்கள். தந்தை எனும் ஆலயத்திற்கு பூசை செய்யும் மலர்களாக இன்று உம் இரு பிள்ளைகளும் கண்ணீர் விட்டுக் கதறுவது கேட்கவில்லையா தந்தையே! இளையவன் இன்று உமை காணமுடியாமல் கதறுகிறான் ஐயா அங்கே. இனி எப்போது காணப்போகிறோமோ நம் தெய்வத்தை. அடுத்தவொரு ஜென்மத்தில் நீங்க எங்க பிள்ளையா வந்து பிறக்கனும் உங்ககிட்ட பட்ட கடன நாங்க வந்து அடைக்கனும் ஐயா.

**மகன்மார்**

**வரதன் , சுரேஸ்**

**எளிமையாக இருப்பது தான்**
**உண்மையாக வாழக் கற்றுக்கொடுக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

அன்பும் பண்பும் நிறைந்த எமதருமை மாமாவே!
என்னகுறை செய்தோம் என்று எமை கண்ணீர் சிந்த விட்டீர்கள்
நெஞ்சம் கனக்கிறது வார்த்தைகள் எழ்வில்லை கண்ணீர் வடிக்கின்றோம்
நீங்கள் எம்மைவிட்டு பிரிய நினைக்கவில்லை மாமா
கொடுமையான காலன் அனுமதி இன்றி அழைத்துவிட்டான் உங்களை
தாங்க முடியவில்லை மாமா!

மருமக்கள் பேரப்பிள்ளைகள் சுற்றமும் உறவும் கூடவே ஊரும்
உலகமும் உங்களை நேசிக்க யாரும் நினையா தருணத்தில்
நீள்துயில் கொண்டீரோ!
நாங்கள் யாவரும் வணங்குகின்றோம் உங்கள்
ஆத்மா சாந்திக்காக ...

**மருமக்கள்**

**தெய்வேந்திரன், சுதேசகுமாரன்,**

**பாஸ்கரன் , சிவாஜினி, சங்கீதா**

இவ் உலகில் எத்தனை சாமிகள் இருந்தாலும்
உம்மைப் போல் ஒரு சாமி இல்லை மாமா....
மாமா என்ற உறவுக்கே உயிர்கொடுத்த
உறவு என் மாமா. நான் வந்ததும்
தன் கட்டில் தந்து எனை தூங்க வைப்பீரே! நீர் இன்று நிரந்தரமாய்
தூங்குவது ஏனோ? பிரிக்க முடியாத சொந்தமும் நீரே மறக்க முடியாத
பந்தமும் நீரே
உம் உயிர் பிரிவை தவிர்க்கமுடியவில்லையே!
எப்பிறவியில் மீண்டும் காண்போம் உம் அன்பையும் பாசத்தையும் பார்த்த பின்பு
அதைவிட வானம் பூமி யாவும் சிறியது எனக்கண்டோம் யாம். கடைசி
காலத்தில் ஆவது உம்குரல் கேட்க ஓடோடி வந்தேன் ஆனால் உம்
இழப்பை எனக்கு பரிசாய் தந்தது இந்தவிதி.

**மருமகன் : ரவீந்திரகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் நாகேஸ்வரன் புலம்பல்

என் தந்தை இல்லை எனும் போது மாமா என்னும் வடிவில் தந்தைக்கு நிகராகக்கிடைத்த சொந்தம் நீங்கள்!
அப்பா இல்லை என்ற குறையை தீர்த்த ஐயாவே!
மிசின் சத்தம் கேட்டால் போதும் ஓடி வந்து கேற் திறப்பீர்களே! இனி யாரும் இல்லை உங்களைப்போல் ஒருவர்
வயலுக்கு பசளை போட வெளிக்கிட்டால் போதும்
சாப்பாடும் வேணாம் என்று துவாயை எடுத்து தலையில் சுற்றி மிசின் மக்காட்டில் ஏறுடுவீரே!
இதை எல்லாம் என் இறுதிமூச்சு இருக்கும்வரை மறக்கமுடியாது ஐயா!
மனிதப் பிறப்பில் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உமைப்போல் ஒருவர் கிடைப்பது அரிது.
இனி எப்போது திரும்பி வருவீர்கள் ஐயா!
பூமிக்கு நிழல் தரும் ஆலமரமாய் இருந்தீர்கள்
இன்று அந்த ஆலமரம் இல்லை
எனும் போது அவ் விழுதுகளின் கண்களில்
கண்ணீர் நிரம்பி ஓடுகிறதே! இருபத்து நான்கு வருடம் வாழ்ந்த வாழ்க்கையை விட கடைசித் தருணத்தில் ஒரு பார்வை பார்த்து தலையை அசைத்தீரே ஐயா அதை எப்படி மறப்பது
காலையில் கோயிலுக்கு சென்று வா என்று அனுப்பிவிட்டு
நீங்கள் மட்டும் எனக்கு சொல்லாமல் போனது தான் ஏனோ?
தாங்க முடியவில்லை ஐயா!
இனி எப்பொழுது உங்கள் முகத்தினை பார்ப்பேனோ?
என்ன செய்து நான் பட்ட கடனை தீர்ப்பேனோ?
உயிர் பிரிந்து போனாலும் என்றும் என் மனதில் நிறுத்தி வைத்திருப்பேன்
உம் நினைவுகளை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரிகள் புலம்பல்

அன்பான எம் சகோதரனே ஆறமுடியவில்லை ஐயா
துன்பத்தில் எம்குடும்பம் துவண்ட வேளைகளில் நீ ஓடோடி வந்தே
எமக்கு உதவுவாயே! இன்று உயிரற்ற உடலைக்கண்டு
உணர்வின்றி நின்றோமே உம் அன்பையும் பண்பையும்
வார்த்தைகளில் வடிக்க வரிகள் இன்றி தவிர்க்கின்றோமே
எம் அருமை சகோதரனே எத்தனை உறவாய் நீர் இருந்த
நிஜமெல்லாம் நித்தம் எம் கண் முன் நிழலாடுகின்றதே இன்று
எப்போதும் உங்கள் பிரிவை எங்களால் மறக்க முடியாது
இப்போதும் தெய்வமென்று இதயத்தில் பூஜிப்போம்.

சகோதரிகள்
பார்வதி, வள்ளியம்மை



# மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

அணையாத சுடர்கள் நீங்கள் – என்றும்
கலையாத புன்முறுவல் செய்வீரே
படைத்தவன் கடவுள் விதித்தவன் விதியை
காப்பவன் கண்ணன் கூறிய கீதையையும் எண்ணி
எம் மனதுதனை தேற்றுகின்றோம் இன்று
திடீரென உங்கள் வாழ்க்கையை இடையில்
காலனவன் பறித்தது தான் ஏனோ?
அமைதியாய் துயிலும் தங்கள் ஆத்மா இறைபதம் சேர
இறைவனை இரஞ்சுகின்றோம்.

மைத்துனர்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது அருமை தாத்தாவே!

ஐயா என்றால் தந்தைக்கு நிகர் என்பார்கள் ஐயா ஐயா என்று ஆசையுடன் அழைத்தோமே இனி யாரை நாம் அழைப்பது. ஐயா என்றால் மறு வார்த்தை பேசோம். இன்று நாம் பேச மௌனமாய் உறங்குவது தான் ஏனோ நாங்கள் செய்யும் ஒவ்வொரு குறும்பு செயல்களையும் பார்த்து ரசித்தவர் நீங்கள் நாம் வாழ்நாளில் எங்கு சென்றாலும் யாரைச் சந்தித்தாலும் உம் அன்பிற்கு ஈடாகாது ஐயா. அம்மம்மா இல்லை எமக்கு இன்று நீங்களும் சென்றால் இனி யார் எமக்கு ஐயா ! உங்கள் பேரக்குழந்தைகள் அழுகுரல் கேட்கவில்லையா ஒரு நொடி எம்மை கண்திறந்து பாருமையா! சில நொடி எமைக்காணாவிட்டால் துடித்து போவீரே இன்று அதை மறந்து நிரந்தரமாய் தூங்குவது தான் ஏனோ? உம் பேரக்குழந்தைகளுக்காக ஒருமுறை எழுந்து வாருமையா உமக்குப்பிடித்த காசிப்படத்தைப் பார்ப்பதற்கு. எமை அடிக்கடி அழைப்பீரே ஐயா ஒரு முறை எமை அழையும் ஓடோடி வந்து உம் கண்முன் நிற்போமே எமை யாருக்கும் விட்டுக்கொடுக்காத தெய்வம் இன்று எம்மைவிட்டு சென்றது தான் ஏனோ? உங்கள் நினைவுகளை நெஞ்சில் சுமந்துகொண்டு உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை தினந்தோறும் வணங்குகிறோம் ஐயா!

**பேரக்குழந்தைகள்**

**பெறாமக்கள் மருமக்கள் புலம்பல்**

எந்தைபோல் புத்திசொல்லி ஏற்றமாம் உயர்ச்சிகூறி வந்தனை எங்கட்கெல்லாம் வகையினைக் கருதிலிப்போம் சிந்தனை இழந்து நாங்கள் திகைக்கின்றோம் நின்பிரிவால். நிலவிலா வானம் போல நிற்கின்றோம் நடுக்காட்டுக்குள்ளே. பகலது முடிந்தது போல் பதைக்கின்றோம் நடுநிசியில்....

**பெறாமக்கள் மருமக்கள்**

---

*பிறர் தவறுகளை கண்டு தன் தவறுகளை திருத்தி கொள்கிறவர்கள் தான் அறிவாளி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..

மலர்வு
01
01
1936



உதிர்வு
28
06
2017

# அமரர் முத்துக்குமாரு சுந்தரம்

நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி
நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா...?
இன்று எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு பரமனின் பாதங்களைப்
பற்றிய
உன்போல் அன்புள்ளங் கொண்ட இனியவரை எங்கு நாம்
தேடுவோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும்*
*குடும்பத்தினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 28 |
| 01 | 06 |
| 1936 | 2017 |

# அமரர் முத்துக்குமாரு சுந்தரம்

**இல. 820, கட்சன் வீதி, வட்டக்கச்சி.**

**அயலில் இருந்தாய் ஆறுதலாய் நாமிருந்தோம்**
**வரும் துன்பம் உனதென, எமக்காய் துடிதுடிப்பாய்**
**இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறக் கலப்பாய்**
**நட்பிலே கர்ணனாய் என்னோடு வலம் வருவாய்**
**பாரை விட்டு நீ பறந்து போனாய், அந்தரத்திலே**
**நாம் இங்கு தவிக்கின்றோம் தேற்றுவார் யாருமின்றி.**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்திடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**சபரி ஐயப்பன் ஆலய பரிபாலன சபை**
**சில்வாவீதி, வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 01 | 28 |
| 01 | 06 |
| 1936 | 2017 |

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களாகிய
நா.சிந்துஜா, நா.யிவிசன் அவர்களின் அன்புத் தாத்தா

## அமரர் முத்துக்குமாரு சுந்தரம்

மண்ணுலக வாழ்வைவிட்டு விண்ணுலகம் சென்றவரே உன்
முகத்தை இனி எப்பிறப்பில் காண்போம்....
காலம் செய்த சதியால் கண்ணீருடன் கதறிப் புலம்புகின்றோம்
நல்வாழ்வு வாழவென இன்பமெல்லாம் எமக்குத் தந்து எம்மனதில்
நிலைத்தவரே! ஆயிரமாயிரம் உறவுகள் அவனியில் இருந்தும்
உங்கள் உறவுக்கு எப்படித்தான் ஈடாகும்....

**அன்னாரின் பிரிவால் துயருறும்**

**ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பொருளியல் கல்லூரி**
**வட்டக்கச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி..



| மண் மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 01 | 28 |
| 01 | 06 |
| 1936 | 2017 |

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல. 820, கட்சன் வீதி,
வட்டக்கச்சியை வசிப்பிடமாகக்கொண்ட

## அமரர் முத்துக்குமாரு சுந்தரம்

கண்கள் கலங்குகின்றோம்
காலனை நாம் வெறுக்கின்றோம்!
மண்ணில் இனி உங்கள்
முகம் காணா தவிப்பினிலே
விண்ணைப் பார்த்தழுது விம்முகிறோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**S. தவமணி குடும்பத்தினர்**
**( பெரியதம்பனை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது தகவல்கள்

★ குதிரை சக்தி என்பது 740 வாட்ஸ்

★ சூயிங்கம் என்பது சிக்கில் எனும் மரப்பாலில் இருந்து தயாரிக்கப்படுகின்றது.

★ ரெயில் வண்டிகள் இல்லாத நாடு – **ஐஸ்லாந்து**

★ மனித உடலின் உள் உறுப்புக்களின் படங்களை முதன்முதலில் வரைந்தவர் – **லியானார்டோ டாவின்சி.**

★ உலகிலே அதிகநாள் உயிர்வாழும் மிருகம் ஆமை.

**– 300 ஆண்டுகள்**

★ சூடான பாலைவனத்தின் வெப்பநிலை **'அரிட்'**என்று அழைக்கப்படுகிறது.

★ சர்வதேச அரிசி ஆய்வு மையம் அமைந்துள்ள இடம் –

**– மணிலா,**

★ தெற்கு ஆசியாவில் அமைந்துள்ள மிகப்பெரிய சிறை –

**– திஹார் சிறை.**

★ ஹிட்லர் என்றதும் நினைவிற்கு வரும் நாடு – **ஜெர்மனி**

★ மியன்மார் நாட்டின் பழைய பெயர் – **பர்மா**

பூச்செண்டு வழங்கும் முறை முதன்முதலில் இங்கிலாந்தில் தான் தொடங்கியது. விக்டோரியா மகாராணி தன்னை மணந்துகொண்ட ஆல்பர்ட்டுக்குத்தான் முதன்முதலில் பூச்செண்டை அன்பளிப்பாகக் கொடுத்தார். அந்தப் பழக்கமே பின்பு பூச்செண்டு கொடுக்கும் வழக்கமாக மாறிவிட்டது.

★ தொலைநோக்கியை விண்வெளி ஆராய்ச்சிக்கு பயன்படுத்தியவர் **– கலிலியோ.**

★ உலகின் அதிகளவு சிலைகள் வடிக்கப்பட்ட மனிதர்

**– லெனின்**

★ ஆலிவ் மரம் ஐரோப்பாக் கண்டத்தில் அதிகமாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுருக்கப்பதங்கள்

| | | |
|---|---|---|
| NATO | - | வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் |
| ADB | - | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| WTO | - | உலக வர்த்தக நிலையம் |
| ILO | - | சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் |
| UNO | - | ஐக்கிய நாடுகள் சபை |
| UNICEF | - | ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் |
| UNHCR | - | ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் |
| WHO | - | உலக சுகாதார ஸ்தாபனம் |
| EEC | - | ஐரோப்பிய பொருளாதார சமூகம் |
| OPEC | - | பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமையம் |
| NASA | - | தேசிய விண்வெளி ஆய்வு நிலையம் |
| BBC | - | பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் |
| USA | - | ஐக்கிய அமெரிக்க அரசு |
| PLO | - | பாலஸ்தீன விடுதலை இயக்கம் |
| ACEAN | - | தென்கிழக்காசிய நாடுகள் நிறுவனம் |
| ITU | - | சர்வதேச தந்தி நிறுவனம் |
| BRD | - | புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச நிறுவனம் |
| IMF | - | சர்வதேச நாணய நிதியம் |
| IMBA | - | சர்வதேச அணுச்சக்தி நிலையம் |
| ANC | - | ஆபிரிக்க தேசிய இயக்கம் |
| WIPO | - | ஐக்கிய அமெரிக்காவின் உலக இரகசியபொலிஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியை

ஆன்மாக்களின் ஆன்மார்த்த கிரியைகளில் அபரக்கிரியையும் ஒன்றாகும். அபரக் கிரியை உத்கிரார்த்தக் கிரியை, தேகாத்த சூர்ணோற்சவம், அந்தியேட்டி, நிவா பாஞ்சாலி தருப்பணம், நக்கினதானம், அவமிருத்துப் பிராயச்சித்தம், புனர்த்தகனம், அஸ்தி சஞ்டசயனம், பாஷாணஸ்தாபனம் (கல்லெடுப்பு), இடபதானம், ஏகோதிஷ்டம், பஞ்ச தச மாசிகம், கோததா கும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம், மாசிகங்கள், ஆப்திகம், வருட ஆண்டுத்திதி, மகாளயம், மாத தருப்பணம் என்பனவாம்.

சமய தீட்சை பெற்றவர்களுக்கே மரணக் கிரியை தக்கதாம், முன்னர் கூறியபடி, சைவ சமயத் தீட்சை பெறாதவன் சைவன் ஆகான். எனவே தீட்சை இல்லையேல் கிரியையும் இல்லை. மேலும், புலால் உண்ணுகின்றவர்களுக்கும் தொடக்குக் கழியும் நாளிலே மரணக் கிரியைகள் தர்ப்பையிலே செய்யப்படுகின்றன. இருப்பினும், அவ்வுடலுக்கு அபிஷேகமும், சிவாக்கினியும் நடைபெறும். சுத்த சைவர்களுக்கு நடைபெறும் கிரியைகளை மேற்கூறியவாறு ஒழுங்கு முறைப்படி நிகழ்வனவற்றைக் கீழே தருகின்றோம்.

சுத்த சைவர் என்னும் போது உணவு வகையினாலும், சைவ அனுட்டானங்களினாலும் மேம்பட்டோரையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

# உத்கிராரத்தக் கிரியை

அஃதாவது, உயிர் உடலை விட்டு மேற் செல்லும் போது செய்யும் கிரியையாகும். உயிர் பிரியும் நேரத்தில் தேவாரம், திருவாசகம் முதலான திருஅருட் பாடல்களைப் பாடுவதும், திருநீறு, உருத்திராக்க மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றை அணிதலும், பஞ்சாட்சர மந்திரத்தை காதில் ஓதுவதும், தானங்கள்வழங்குதலும் நல்லது. இவை பலமுறை செய்தல் நேரிடும். இருப்பினும், அவ்வப்போது செய்தல் நல்லது. உயிர் உடலை விட்டு நீங்கியதும், தரையிலே அல்லது உயரமான ஒரு பலகையிலே தருப்பை பரவித் தெற்கே தலை வைத்துப் படுக்க வைத்தல் வேண்டும்.

## அந்தியேட்டி

உடம்பு விடுகையால் ஆன்மாவிற் பற்றியுள்ள வினை நீக்கத்தின் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும். சமயாசாரங்களில் ஏற்பட்ட குறைகளைச் சுத்தி செய்வதே அந்தியேட்டியின் நோக்கமாகும். இவை மூன்று வகைப்படும். சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவாணஅந்தியேட்டி என்பனவாகும். இதிற் சமய அந்தியேட்டி, சமய தீட்சை பெற்றவருக்கும், சிவசின்னம் அணிந்தவர்களுக்கும், சிவ வழிபாடு செய்தவருக்கும் உரியனவாகும். விசேட அந்தியேட்டி சமய விசேட தீட்சை பெற்றவர்களுக்குச் செய்யப்படுவதாகும். சமய விசேட நிருவாண தீட்சையோடு, சதாபிஷேகம், ஆசாரியபிஷேகம் பெற்றவர்களுக்குச் செய்யப்படும் அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டியாகும். மண்டபம் அமைத்தல், பூசை ஆகிய இவற்றில் வேறுபாடில்லை. ஆயினும், இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியை முறையில் வேறுபாடுண்டு.

### ஆப்திகம்

ஆண்டு முடிவில் இறந்த திகதியில் இறந்தவரைக் கருதித் தொடங்கிய அந்தியக் கிரியைகள் முடிவடைகின்றன.

### வருட சிரார்த்தம்

ஆண்டு தோறும் இறந்த மாதத்துத் திதியிற் செய்யப்படுவதாகும். இறந்தோர்களின் ஆன்மசாந்திக்காகவும், நல்லாசிக்காகவுஞ் செய்யப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாளயம்

இது ஆண்டு தோறும் புரட்டாதி மாதத்துப் பூர்வபட்சப் பிரதமையிலிருந்து அமாவாசை வரையுள்ள திதியில் யாருக்காகச் செய்யப்படுகின்ற திதியோ, அத்திதியில் அவருக்காகக் கொடுப்பதை மகாளயம் என்பர். இதனை இரவிற் கொடுக்கும் உணவு என்பர்.

**கண் பார்வை குறைவுக்கு.....**

வேப்பங் கொழுந்தை கசக்கிப் பிழிந்து ஒரு கண்ணுக்கு ஒரு துளி வீதம் காலையில் மட்டும் மூன்று நாட்கள் விட்டு வர நல்ல குணம் தெரியும்.

**உடல் ஆரோக்கியத்திற்கு.....**

நெல்லிக்காய்களை கொட்டை நீக்கி பொடியாக நறுக்கி பால் கலந்து வெல்லப்பாகில் போட்டுப் பதமாக கிளறி ஆற வைத்து சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொண்டு அவ்வப்போது சாப்பிட்டு வர உடல் பலம் பெறும்.

**இரத்தத்தின் தூய்மைக்கு.....**

ஒரு பிடி கொத்துக் கடலையை முதல் நாள் இரவே ஊற வைக்கவும். சீமை அத்திப்பழம் இரண்டையும் அதிலேயே ஊற வைத்து காலையில் அப்படியே வேகவைத்து வடிகட்டி பால் சேர்த்து சாப்பிட இரத்தத்தை தூய்மைப் படுத்துவதுடன் உடம்பிற்கு சுறுசுறுப்பையும் அளிக்கிறது.

**புற்று நோய் வராமல் தடுக்க.....**

வில்வ இலை, வேப்பிலை, துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி இலை, வெள்ளை வெற்றிலை வகைக்கு 25 கிராம் எடுத்து மண் சட்டியிலிட்டு 3 லீற்றர் நீர் ஊற்றி பாதியாக சுண்டக்காய்ச்சி வீட்டிலுள்ளோர் அனைவரும் 50 மி.லீ குடித்து வர வேண்டும். வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் போதும் புற்று நோய் வராது. உணவில் அடிக்கடி பாகற்காய், சுண்டைக்காய் சேர்த்து வரவும்.

**வயிற்றுக் கட்டிக்கு.....**

பூண்டு, திப்பிலி, கடுக்காய், வகைக்கு 10 கிராம் எடுத்து வெண்ணெய் போல் அரைத்து 60 மி.லீ கோமூத்திரத்தில் கலக்கி காலை, மாலை சாப்பிட்டு வர வயிற்றுக்கட்டி கரையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியமும் அவற்றை யாத்தவர்களும்

| | | |
|---|---|---|
| 1. | மகாபாரதம் | - வேதவியாசர் |
| 2. | அர்த்தசாஸ்திரம் | - கௌடில்யர் |
| 3. | கீதாஞ்சலி | - இரவீந்திரநாத்தாகூர் |
| 4. | சாகுந்தலம், மேகதூதம் இரகுவம்சம் | - காளிதாசன் |
| 5. | பகவத்கீதை | - வேதவியாசர் |
| 6. | இராமாயணம் | - வான்மீகி, வசிட்டர், கம்பர் |
| 7. | சத்தியசோதனை | - மகாத்மா காந்தி |
| 8. | குடியரசு | - பிளேட்டோ |
| 9. | தேசங்களின் செல்வம் | - அடம்ஸிமித் |
| 10. | எனது போராட்டம் | - அடோல்ப்கிட்லர் |
| 11. | மகாவம்சம் | - மகாநாமதேரோ |
| 12. | சூளவம்சம் | - தர்மகீர்த்திதேரோ |
| 13. | பிரான்சியப்புரட்சி | - தோமஸ்காரிலயின் |
| 14. | கலிவரின் பயணங்கள் | - யொநாதன்சவிப்ற் |
| 15. | அர்த்தமுள்ள இந்துமதம், யேசு காவியம் | - கவியரசு கண்ணதாசன் |
| 16. | பஞ்சதந்திரம் | - விஸ்ணுசர்மா |
| 17. | நளவெண்பா | - புகழேந்திப்புலவர் |
| 18. | திருக்குறள் | - திருவள்ளுவர் |
| 19. | கந்தபுராணம் | - கச்சியப்பர் |
| 20. | திருப்புகழ் | - அருணகிரிநாதர் |

**வெற்றி என்பது பெற்றுக்கொள்வதற்கு..**
**தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கு!**

- வைரமுத்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு தொடர்பான பொது அறிவு

1. எந்த ஆண்டு இந்தியா ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றது? 1928
2. இந்திய வீராங்கனை சுமன் பாலா எந்த விளையாட்டோடு தொடர்புடையவர்? **ஹாக்கி**
3. பங்க்கர், சுக்கர், மேலட் என்ற வார்த்தைகள் எந்த விளையாட்டுடன் தொடர்பு உடையவை? **போலோ**
5. டைகர் (புண்ஞ்ங்ழ்) என்று அழைக்கப்பட்ட முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?
**மன்சூர் அலிகான் பட்டோடி**
6. உபேர் கோப்பை (முக்ஷங்ழ் ஈன்ல்) எந்த விளையாட்டுக்குப் பரிசாகத் தரப்படுகிறது? பேட்மின்டன்
7. வாட்டர் போலோ விளையாட்டில் ஒரு அணிக்கு எத்தனை வீரர்கள் இருப்பார்கள்? **7**
8. ஆஹாகான் கோப்பை எந்த விளையாட்டுக்குப் பரிசாகத் தரப்படுகிறது? **பேட்மின்டன்**
9. வெகு காலத்திற்கு முன்பு இந்தியாவில் நடத்தப்பட்ட கால்பந்து போட்டி எது? **டூரான்டோ கப் போட்டி**
10. ரங்கசாமி கோப்பை எந்த விளையாட்டுக்குப் பரிசாகத் தரப்படுகிறது? **ஹாக்கி**
11. தாமஸ் கோப்பை எந்த விளையாட்டுக்குப் பரிசாகத் தரப்படுகிறது? **பேட்மின்டன்**
12. தயான் சந்த் டிராஃபி எந்த விளையாட்டிற்கு வழங்கப்படுகிறது? **ஹாக்கி**

---

**வெற்றிக்கும் , தோல்விக்கும் சிறு வித்தியாசம் தான்.**

**கடமையை செய்தால் வெற்றி .**

**கடமைக்குச் செய்தால் தோல்வி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதியாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேவன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.!

முத்தன்ன வெண் நகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியர் பாடாரோ நஞ்சிவனை!
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ!
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ!
எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்!
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப்முப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக்கோதாட்டும்
சீலரும் பாடிச் சிவனே சிவனேயென்
ஓல மிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றதும் நானாமே
போன திசைபகராய் இன்னமும் புலர்ந்தின்றோ!
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தம்கோனைப் பாடலோர் எம்பாவாய்.!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகல கலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதபங் கேரு கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே



பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ் சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே.

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே

திருச்சிற்றம்பலம்

---

## அறிஞர் சிந்தனையிலிருந்து

- கொடிய பாவம் செய்தவர்கள் பேய்பிசாசுகளாக இருந்தேயாக வேண்டும். அந்த பாவபலன் தீர்ந்தவுடன் அவர்கள் செய்த சிறிதளவு புண்ணியம் அவர்களை மறுபடியும் மனிதனாக பிறக்க வைக்கிறது.
- நீ சுமக்கும் நம்பிக்கை நீ கீழே விழும்போது உன்னைச் சுமக்கும். விலகி நிற்பவன் வெல்லுவதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.
- முயற்சி செய், கடுமையாக முயற்சி செய், மிகக்கடுமையாக முயற்சி செய், வெற்றியடைவாய்.
- ஒருமுறை முன்னே வா, பல முறை முன்வரும் ஆற்றல் உன்னை வந்து சேரும்.
- முடியாது என்ற காரியம் உன் அகராதியில் கிடையாதிருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

முத்துக்குமாரு + சின்னத்தங்கம்

- ★ தங்கம் + ஐயம்பிள்ளை ★
- ★ நாகநாதி + மாணிக்கம் ★
- ★ முருகேசா + கனகம்மா
- பார்வதி + முருகேசு ★
- வள்ளியம்மை + ஐயம்பிள்ளை
- ★ **சுந்தரம்**

சின்னத்தம்பி + வள்ளியம்மை

- ★ வைத்தியலிங்கம் + செல்லம்மா
- ★ கதிரவேலு + குகனேஸ்வரி
- ★ கோவிந்தபிள்ளை + சீதேவிப்பிள்ளை
- சரவணமுத்து + இந்திராணி
- அப்பையா + சரஸ்வதி
- தையல்நாயகி + தம்பையா ★
- **தையல்முத்து** ★
- தனுஸ்கோடி + பரமேஸ்வரி
- சின்னம்மா + சோமசுந்தரம்
- லட்சுமி + கோபாலபிள்ளை
- ★ இரத்தினம்

சுந்தரம் + இரத்தினம்

- லலிதா + தெய்வேந்திரன்
  - திவாகர் + றஜனி → அஞ்சனா, ஆதிரா
  - உஷ்னியா
- பராசக்தி + சுதேசகுமாரன்
  - சத்தியசீலன் + சிவறஞ்சினி → ரேனுகப்பிரியா, சத்தியப்பிரியா, மதுப்பிரியா
  - பாமிலன்
  - கபிலன்
  - பிரமிலன்
- இந்திராதேவி + பாஸ்கரன்
  - விஜிதரன் + நிக்கோலா → புரூணோ
  - சயந்தன்
  - காயத்திரி
- கணேசகுமார் + சிவாஜினி
  - கோகுறதன்
  - ஆரதன்
- இந்திராணி + ரவீந்திரன்
  - ஜெனிசா
  - விதுசா
  - விபிசன்
- மங்களேஸ்வரி + நாகேஸ்வரன்
  - கிருசாந்தினி
  - டயிசினி
  - சிந்துஜா
  - யிவிசன்
- சுரேஸ்குமார் + சங்கீதா
  - சாரங்கி
  - கனிசா
  - வர்சினி

★ அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது வம்ச விருட்சமும் எமக்கெல்லாம் ஆணிவேராகவும் நல்வழிகாட்டி ஆதரித்து புன்முறுவல் பூத்து வரவேற்று சீர்சிறப்புடன் வாழ வழிகாட்டி தன் உற்றார், உறவினர், நண்பர்களை ஆதரித்து அல்லும் பகலும் எமக்காக அரும்பாடுபட்ட எமது அன்புத் தெய்வம்.

எம்மை விட்டு மறைந்த செய்தியினை அறிந்து எமது இல்லம் நாடி ஓடி வந்து கண்ணீர் சிந்தியவாறு எமக்கு ஆறுதலும் தேறுதலும் கூறிய அன்புள்ளம் கொண்ட அனைவரிற்கும், தொலைபேசியிலும், நேரிலும் அனுதாபம் தெரிவித்து உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்களுக்கும் அஞ்சலி செய்தோருக்கும் இறுதிக்கிரியை வரை எம்முடன் இருந்து உதவியும் ஒத்தாசையும் புரிந்தவர்களுக்கும் தேநீர் மற்றும் உணவு வகை தந்தவர்களுக்கும் அஞ்சலி பிரசுரம், மலர் வளையம் மூலம் அஞ்சலி செய்தோருக்கும் எம் துயர் சுமந்து நின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் மேலும் இந்த நினைவு மலர்தனை அச்சிட்டு தந்துதவிய வேழன் பதிப்பகத்தினருக்கும் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பித்த எங்கள் உற்றார், உறவினர், சுற்றம், நண்பர்கள் அனைவருக்கும் எமது கரம் கூப்பி சிரம் தாழ்த்தி நன்றியினை தெரிவிக்கின்றோம்.

**"காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மம்மில்குளம் நாகதம்பிரான் ஆலயம்

## மனிதன் மனிதனாக வாழ 18 முக்கிய விடயங்கள்

மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் - தாய் தந்தையர்
மிகவும் நல்ல நாள் - இன்று
மிகப் பெரிய பெருமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது - பணிவு
மிக வேண்டாதது - வெறுப்பு
மிகப்பெரிய தேவை - நம்பிக்கை
மிகக்கொடிய நோய் - சந்தேகம்
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
கீழ்த்தரமான விடயம் - பொறாமை
நம்பக்கூடாதது - வதந்தி
ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு
செய்யக் கூடாதது - நம்பிக்கை துரோகம்
செய்யக் கூடியது - உதவி
விலக்க வேண்டியது - சோம்பேறித்தனம்
உயர்வுக்கு வழி - உழைப்பு
நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு
பிரியக் கூடாதது - நட்பு
மறக்கக் கூடாதது - நன்றி

வேழன் பதிப்பகம் 021 228 5579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org